முதியவர்கள், மாற்றுத்திறனாளிகள் வசதிக்காக

# மெட்ரோ ரெயில் நிலையங்களில் 122 லிப்டுகள், 296 எஸ்கலேட்டர்கள்

## ரூ.198 கோடி செலவில் அமைக்கப்படுகின்றன

சென்னை, பிப்.2–

சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களில் முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வசதிக்காக ரூ.198 கோடி செலவில் 122 லிப்டுகளும், 296 எஸ்கலேட்டர்களும் அமைக்கப்பட உள்ளன.

### மெட்ரோ ரெயில்

சென்னை மெட்ரோ ரெயில் திட்டத்தில் 45 கிலோ மீட்டர் நீளம் உள்ள 2 வழித்தடங்கள் உயர்த்தப்பட்ட பாதையாகவும், சுரங்கப்பாதையாகவும் அமைக்கப்படுகின்றன. இதில் 19 ரெயில் நிலையங்கள் தரைக்கு அடியில் சுரங்கப்பாதையிலும், 13 ரெயில் நிலையங்கள் தரைமட்டத்திற்கு மேல் உயர்த்தப்பட்ட பாதையிலும் கட்டப்படும்.

தரைமட்டத்திற்கு மேல் உயர்த்தப்பட்ட ரெயில் நிலையத்திற்கு செல்லும் பயணிகள், முதலில் சாலை மட்டத்தில் இருந்து ஏறி, இடைத்தளத்திற்குச் சென்று அங்கு அமைக்கப்படும் டிக்கெட் கவுண்ட்டரில் டிக்கெட் வாங்கிய பிறகு, மேலும் ஏறி பிளாட்பாரம் இருக்கும் தளத்திற்குச் சென்று ரெயில் வேண்டும்.

### லிப்ட் வசதி

இதேபோல், தரைக்கு அடியில் சுரங்கப்பாதையில் உள்ள ரெயில் நிலையத்திற்கு செல்லும் பயணிகள் தரைப்பகுதியில் இருந்து கீழே இறங்கி இடைமட்டத் தளத்தில் டிக்கெட் பெற்ற பிறகு, மேலும் கீழே இறங்கி பிளாட்பாரம் இருக்கும் தளத்திற்குச் சென்று ரெயில் ஏற வேண்டும்.

எனவே, ரெயில் நிலையங்களில் மேலும்–கீழும் செல்வதற்கு படிக்கட்டுகள் கட்டுவதோடு எஸ்கலேட்டர் வசதி (நகரும் மின்படிக்கட்டு) அமைக்கப்படும். முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் பயன்பாட்டிற்காக லிப்ட் (மின்தூக்கி) வசதியும் ஏற்படுத்தப்படும்.

### 198 கோடி செலவில்

மெட்ரோ ரெயில் இயக்கப்படும் காலங்களில் லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர்கள் சுமார் 20 மணி நேரம் இயக்கப்படும். மெட்ரோ ரெயில் நிலையங்களில் ரூ.198 கோடியில் 122 லிப்டுகளும், 296 எஸ்கலேட்டர்களும் நவீனமயமாகவும், உலகத்தரத்திலும் அமைக்கப்படும். ஒரு லிப்டில் 13 நபர்கள் செல்லலாம். உடல் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகளின் சக்கர நாற்காலிகளை நிறுத்தும் வசதியும், பார்வையற்ற மாற்றுத்திறனாளிகள் லிப்டை எளிதாக இயக்கும் வண்ணம் பிரெய்லி பட்டன்களும், தானியங்கி மீட்பு சாதன வசதிகளும் இருக்கும்.

எஸ்கலேட்டர்களில் மணிக்கு சுமார் 9 ஆயிரம் பேர் செல்லலாம். கூட்ட நெரிசலுக்கு ஏற்றவாறு அதன் வேகத்தை மாற்றி அமைக்கவும் முடியும். ரெயில் நிலையத்தில் உள்ள ரிமோட் கண்காணிப்பு அமைப்பின் மூலம் லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர்கள் கண்காணித்து இயக்கப்படும். லிப்ட் மற்றும் எஸ்கலேட்டர் அமைக்கும் பணி ஜான்சன் அண்ட் ஜான்சன், எஸ்.ஜே.ஈ.சி. ஆகிய நிறுவனங்களிடமும் ஒப்படைக்கப்பட்டு உள்ளது.

மேற்கண்ட தகவலை, சென்னை மெட்ரோ ரெயில் நிறுவனத்தின் பொதுமேலாளர் எஸ்.கிருஷ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.